Registered as a News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily | மக்கள் தினசரி

நாதம் 03 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 24 | (10-10-1992) | சனிக்கிழமை | ஓசை 235

## 1993 வரவு செலவுத் திட்டம் நிதி ஒதுக்கீடு விபரம்

அடுத்த ஆண்டிற்கான வரவு - செலவுத் திட்டத்தில் பாதுகாப்பு செலவினமாக 1800 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 300 கோடி ரூபா அதிகமானதாகும். இராணுவ நடவடிக்கைகளுக்காக 780 கோடி ரூபா ஒதுக்கப்படுமெனவும், இதில் கடற்படைக்கு 150 கோடி ரூபாவும், விமானப்படைக்கு 160 கோடி ரூபாவும் அளிக்கப்படுமெனவும் தெரிய வருகிறது. சட்டம், அமுலாக்கல், பொது ஒழுங்கு மற்றும் அரசாங்கப் பாதுகாப்பு செலவினங்களுக்காக பொலிஸ் திணைக்களத்தின் செலவீடு 370 கோடி ரூபாவாக 1993 இல் இருக்கும் எனத் தெரியவருகிறது. (3ஆம் பக்கம் பார்க்க)

# அமைதி வலயம் அரசின் ராணுவப்பொறி

# ஆனையிறவுபாதைபற்றிபுலிகள் விளக்கம்

## மனிதாபிமான நோக்கமானால் பூநகரி பாதையை திறக்கலாம்

[யாழ்ப்பாணம்]

யாழ். குடாநாட்டு மக்களின் போக்குவரத்து சிக்கலை "மனிதாபிமான அடிப்படையில்" அரசாங்கம் தீர்த்துவைக்க விரும்பினால், பூநகரிப் பகுதியிலிருந்து தனது துருப்புக்களை வாபஸ் பெற்று கேரதீவு – சங்குப்பிட்டி பாதையை திறந்துவிட அரசு முன்வரவேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வமான பேச்சாளர் ஈழநாதத்திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். "ஆனையிறவுப் பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்கு திறந்துவிட்டிருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் காலத்திற்கு காலம் அறிவித்து வருகிறது. எனவே, இந்தப்பாதையை போர் நடவடிக்கைகள் தவிர்ந்த அமைதி வலயமாக அரசு செய்துள்ள பிரகடனம் ஒரு புதிய விவகாரமல்ல குடாநாட்டு முற்றுகையின் தோல்வியை மூடி மறைக்கவும், ஆனையிறவு பிரதேசத்தில் முடங்கிக்கிடக்கும் சிங்களப் படையணிகளை இடம் நகர்த்தி யாழ்ப்பாண விஸ்தரிப்பு போரை தொடரவுமே அரசு இந்த தந்திரோபாயத்தை கையாள முனைகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தப் பொறிகளில் விழுந்துவிட தயாராக இல்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"சிறிலங்கா ஆயுதப்படைகளின் போர்நிறுத்த மீறல்கள் பற்றியும், அமைதிவலய பிரகடனங்கள் பற்றியும் எமது மக்கள் நன்கு அறிவர். மனிதாபிமானத்தின் அடிப்படையில், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் கண்காணிப்பில் கீரிமலை - சேந்தாங்குளம் பாதையை அமைதி வலயமாக பிரகடனம்செய்துவிட்டு புலிகள் நிலக்கண்ணிகளை அகற்றியதன் பின்னர் சிங்கள இராணுவம் ஒப்பந்த கடைப்பாடுகளை மீறி இப்பாதையூடாக படையெடுப்பு நடத்தியதை யாவரும் அறிவர். ஆனையிறவிலும் இப்படியான ஒரு கபட நாடகத்தை மேடை

களின் மிகவும் துணிகரமான, வெற்றிகரமான தாக்குதல்கள் இப் பிராந்தியத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தை நிலைகுலையச்செய்திருக்கிறது இராணுவ வேலிகள் உடைத்தெறிபப்பட்டிருக்கிறன. முற்றுகை தளரத்தொடங்கி இராணுவத்தின் போர் உறுதி நிலைகுலைய ஆரம்பித்ததும் அரச படைகள் கிளாலிப் பகுதியில் மனிதாபிமான மற்ற முறையில் பொதுமக்கள்

வாழைச்சேனைப் பகுதியில்

## குண்டு வெடிப்பிற்கு ஒருவர் பலி; 8 பேர் காயம்

(கொழும்பு)

வாழைச்சேனை மக்கள் வங்கிக் கட்டடத்திற்கு எதிரே

எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் சேதமாகிய சொத்துக்களின்

## மேலதிக உணவுபெற அரசஅதிபர் முயற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுக்கென மேலதிக அரிசி, சீனி போன்ற அத்தியாவசியப்பொருள்களை கப்பல் மூலம் எடுத்துவருவதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்று பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படும் "குமாரி" என்ற கப்பலில் எடுத்துவரப்படும் மேற்படி பொருள்கள் குறைவாக உள்ளதால் இந்த நடவடிக்கையை யாழ். அரச அதிபர் எடுத்துள்ளார்.

கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு மேற்படி நிலைமைகள் குறித்தும், அடுத்து இங்கு வரவிருக்கும் "குமண" கப்பலில் சீனி, அரிசி போன்ற பொருள்களை அதிகளவு அனுப்பிவைக்கும்படி படியும்கோரி அவசர வானொலிச் செய்தி ஒன்றை யாழ். அரச அதிபர் நேற்று நண்பகல் அனுப்பிவைத்தார். (க)

## பொருள் வருவதில் தாமதம்

(யாழ்ப்பாணம்)

குடா நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்களைக் கப்பல் மூலம் எடுத்து வருவதில் காலதாமதம் தோன்றவுள்ளது.

தற்போது சேவையில் உள்ள கப்பல்களில் ஒன்று மன்னார் (4 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் மாவட்டத்தில் மக்களின் சொத்துகள் சூறை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்களின் சொத்துக்கள் பல சூறையாடப்பட்டுள்ளன.

சமூகவிரோத சதிக்கும்பலும் இராணுவத்தினரும், முஸ்லிம் காடையர்களும் பெருமளவு பொருள்களை சூறையாடியுள்ளனர்.

இவ்வாறு சூறையாடப்பட்ட பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமைபடகுமூலம் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## வவுனியா செயலகத்தின் முயற்சிகள் தோல்வி

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் அரச திணைக்களங்களையும் அலுவலகங்களையும் செயல்படவைப்பதில் வவுனியா செயலகம் எடுத்துவரும் நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வி

ஈடுபடுவதற்கு பின் நிற்பதே இத் தோல்விக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த இப் பிரதேசத்தில் இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

## விபத்தில் பெண்காயம்

(யாழ்ப்பாணம்)

லாண்ட் மாஸ்ரர் மோதித் தள்ளியதால் பெண்மணி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். பருத்தித்துறை வீதியில் வசிக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த ந. பர்வதம் (வயது 45)

திற்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார். "ஆனையிறவுப் பாதையை பொதுமக்களின் போக்குவரத்திற்கு திறந்துவிட்டிருப்பதாக சிறிலங்கா அரசாங்கம் காலத்திற்கு காலம் அறிவித்து வருகிறது. எனவே, இந்தப்பாதையை போர் நடவடிக்கைகள் தவிர்ந்த அமைதி வலயமாக அரசு செய்துள்ள பிரகடனம் ஒரு புதிய விவகாரமல்ல குடாநாட்டு முற்றுகையின் தோல்வியை மூடி மறைக்கவும், ஆனையிறவு பிரதேசத்தில் முடங்கிக்கிடக்கும் சிங்களப் படையணிகளை இடம் நகர்த்தி யாழ்ப்பாண விஸ்தரிப்பு போரை தொடரவுமே அரசு இந்த தந்திரோபாயத்தை கையாள முனைகிறது. விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தப் பொறிகளில் விழுந்துவிட தயாராக இல்லை" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

"சிறிலங்கா ஆயுதப்படைகளின் போர்நிறுத்த மீறல்கள் பற்றியும், அமைதிவலய பிரகடனங்கள் பற்றியும் எமது மக்கள் நன்கு அறிவர். மனிதாபிமானத்தின் அடிப்படையில், சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் கண்காணிப்பில் கிளாலை - சேந்தாங்குளம் பாதையை அமைதி வலயமாக பிரகடனம்செய்துவிட்டு புலிகள் நிலக்கண்ணிகளை அகற்றியதன் பின்னர் சிங்கள இராணுவம் ஒப்பந்த கடமைப்பாடுகளை மீறி இப்பாதையூடாக படையெடுப்பு நடத்தியதை யாவரும் அறிவர். ஆனையிறவிலும் இப்படியான ஒரு கபட நாடகத்தை மேடையேற்ற அரசு முனைகிறது."

"சமீபகாலமாக ஆனையிறவு, பூநகரி பிரதேசங்களில் புலிப்படைப் போராளிகளின் மிகவும் துணிகரமான, வெற்றிகரமான தாக்குதல்கள் இப் பிராந்தியத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை நிலைகுலையச்செய்திருக்கிறது இராணுவ வேலிகள் உடைத்தெறியப்பட்டுள்ளன. முற்றுகை தளர்த்தொடங்கி இராணுவத்தின் போர் உறுதி நிலைகுலைய ஆரம்பித்ததும் அரச படைகள் கிளாலிப் பகுதியில் மனிதாபிமானமற்ற முறையில் பொதுமக்கள் மீது தாக்குதல்களை நடத்தினர். அப்பாவிப்பொது மக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வாழைச்சேனைப் பகுதியில்

## குண்டு வெடிப்பிற்கு ஒருவர் பலி; 8 பேர் காயம்

(கொழும்பு)

வாழைச்சேனை மக்கள் வங்கிக் கட்டடத்திற்கு எதிரேயுள்ள தேநீர்ச் சாலையில், நேற்றுக்காலை பார்சல் குண்டு ஒன்று வெடித்ததில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் எட்டுப் பேர் படுகாயமடைந்துள்ளனர். இச்சம்பவத்தில் சேதமாகிய சொத்துக்களின் பெறுமதி இன்னமும் மதிப்பிடப்படவில்லை என்று கூட்டுப்படைத் தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது.

''குமாரி'' என்ற கப்பலில் எடுத்துவரப்படும் மேற்படி பொருள்கள் குறைவாக உள்ளதால் இந்த நடவடிக்கையை யாழ். அரச அதிபர் எடுத்துள்ளார்.

கொழும்பு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருக்கு மேற்படி நிலைமைகள் குறித்தும், அடுத்து இங்கு வரவிருக்

## மக்களின் சொத்துகள் சூறை

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கடந்த மாதம் 30ஆம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது பொதுமக்களின் சொத்துக்கள் பல சூறையாடப்பட்டுள்ளன.

சமூகவிரோத சதிக்கும்பலும் இராணுவத்தினரும், முஸ்லிம் காடையர்களும் பெருமளவு பொருள்களை சூறையாடியுள்ளனர்.

இவ்வாறு சூறையாடப்பட்ட பொருள்கள் கடந்த செவ்வாய்க்கிழமைபடகுமூலம் கொண்டு செல்லப்பட்டதாக தெரியவருகிறது.

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## வவுனியா செயலகத்தின் முயற்சிகள் தோல்வி

(வவுனியா)

செட்டிகுளம் பிரதேசத்தில் இராணுவ கட்டுப்பாட்டின் கீழ் உள்ள பகுதிகளில் அரச திணைக்களங்களையும் அலுவலகங்களையும் செயல்படவைப்பதில் வவுனியா செயலகம் எடுத்துவரும் நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வி அடைந்துள்ளன.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் இப் பகுதியில் பணியில் ஈடுபடுவதற்கு பின் நிற்பதே இத் தோல்விக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது.

முற்றிலும் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்த இப் பிரதேசத்தில் இராணுவ தாக்குதலுக்கு அஞ்சி மக்கள் அனைவரும் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

தற்போது தமிழ் மக்களின்

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## விபத்தில் பெண்காயம்

(யாழ்ப்பாணம்)

லான்ட் மாஸ்ரர் மோதித் தள்ளியதால் பெண்மணி ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார். பருத்தித்துறை வீதியில் வசிக்கும் புங்குடுதீவைச் சேர்ந்த ந. பர்வதம் (வயது 45) என்பவரே மேற்படி படுகாயம் அடைந்தவர் ஆவார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஆயுதம்வைத்திருப்பவருடன் பேச்சுவார்த்தை இல்லை

—பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)

ஆயுதங்களைக் கைவிட்டவர்களுடன் மட்டுமே இனிப் பேச்சுக்கள் நடத்தப்படும் என்று பிரட்மன் வீரக்கோன் கூறியுள்ளார். சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன்வாராந்த செய்தியாளர் மாநாட்டில் பேசுகையில், ஆயுதங்களைக் கைவிட்டவர்களுடன் மட்டுமே இனப்பிரச்சினைத் தீர்வு பற்றிய பேச்சுக்கள் நடத்த முடியும் எனவும், சகல அரசியற் கட்சிகளுடனும் இது தொடர்பாகப் பேச வேண்டும் இதுதான் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்றும் தெரிவித்தார்.

பிரச்சினைத் தீர்விற்காக யார் ஆயுதங்களைப் பாவிக்கின்றனரோ, அவர்களுடன்

( 3 ஆம் பக்கம் பார்க்க )

## புலிகள் - அரசு பேச்சு காங்கிரஸின் புரளியாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் வட்டாரங்கள் புரளி கிளப்பி விடுவதாக கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

# ஆசிரியை வெட்டிக்கொலை நால்வருக்கு மரணதண்டனை

பளைப் பகுதியில் கடந்த வருடம் பாடசாலை ஆசிரியை ஒருவரைப் படுகொலை செய்தது தொடர்பாக நான்கு பேருக்கு தமிழீழ விடுதலைப் புலிகளால் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் பொற்கோ தெரிவித்தார்.

நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் மேற்படி கொலை தொடர்பாக அவர் விளக்குகையில் கடந்த வருடம் ஜுன் மாதம் 25 ஆம் திகதி பளையில் உள்ள தர்மக்கேணி என்னுமிடத்தில் அதே இடத்தைச் சேர்ந்த குமாரசாமி தர்சனா (வயது 24) என்னும் ஆசிரியை பாடசாலை முடிந்துவரும் வழியில் நண்பகல் ஒருமணிக்கும் 1.30 ற்கும் இடையில் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

பளை சின்னத்தாளையடி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை ஆசிரியையான இவர் மீது அதே இடத்தைச்சேர்ந்த மினிபஸ் உரிமையாளரும், புகைப்படப் பிடிப்பாளருமான நல்லையா நவரத்தினராசா (நவம் - வயது 31) என்பவர் ஒருதலைக் காதல் கொண்டிருந்தார். இவர் பல தடவைகள் தனது காதலை வெளிப்படுத்தியும் அவர் அதற்கு இணங்க மறுத்துள்ளார்.

இதனால் மேற்படி நபர் தனக்குக்கிடைக்காதது வேறு எவருக்கும் கிடைக்கக்கூடாது எனக் கருதி தர்மக்கேணி பளையைச் சேர்ந்தவர்களான குலசேகரம் மகேந்திரராசா (வயது 31) செல்லையா சுந்தரம்பிள்ளை (வயது 40) மற்றும் மிருசுவில் கெற்பலியைச் சேர்ந்த விவசாயியான சண்முகம் மாப்பாணி ஆகியோரை இணைத்து நன்கு திட்டமிட்டு இப்படுகொலையை நடாத்திபுள்ளனர்.

இக்கொலையாளிகள் சம்பவதினம் அவ்வூரில் நடைபெற்ற கோவில் திருவிழாவைத் தம

( 3 ஆம் பக்கம் பார்க்க )

# சிறுமிமீது பாலியல்வன்முறை இளைஞருக்கு மரணதண்டனை

(நமது நிருபர்)

சிறுமி ஒருவரைப் பாலியல் வன்முறைக்குட்படுத்திய பின் கொடூரமான முறையில் படுகொலை செய்த இளைஞர் ஒருவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனைத் தீர்ப்பு வழங்கியுள்ளனர்.

கடந்த ஆகஸ்ட் 30-ம் திகதி சரசாலை வடக்கில் கந்தசாமி ஷகிலா (வயது 11) என்ற சிறுமியைச் சாணம் அள்ள என அழைத்துச் சென்று அவர் மீது பாலியல் வன்முறையில் ஈடுபட்டபின் வாய்க்குள் மண்ணைத் திணித்துக் கழுத்தைத் திருகியும் படுகொலை செய்தது தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த ஐயாத்துரை ரசிகரன் (வயது 17) என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டார். தமிழீழவிடுதலைப் புலிகளால் இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் முடிவில் மேற்படி நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதே வேளை வைத்திய பரிசோதனை அறிக்கைகளும் மரண விசாரணைகளும் இதனை ஊர்ஜிதப்படுத்தியதைத் தொடர்ந்து மேற்படி இளைஞருக்கு விடுதலைப் புலிகள் மரணதண்டனைத் தீர்ப்பை வழங்கியுள்ளதாக விடுதலைப் புலிகள் பிரமுகர் பொற்கோ நேற்று கோண்டாவில் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## மூளைசாலிகளுக்கு நாட்டில் இடமில்லையாம்

—அத்துலத்முதலி கவலை

(மாத்தறை)

எமது போராட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டு செல்வோமேயொழிய சோதனைகளை கண்டு அஞ்சமாட்டோம்என ஜனநாயக ஐக்கிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி தெரிவித்தார்.

எல்பிட்டிய தேர்தல் தொகுதியிலுள்ள மஹா இந்துருவ என்னும்இடத்தில்நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஒருபக்கம் வடக்கு - கிழக்கு யுத்த நிலைமை, மறுபக்கமோ விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் இன்று முழுநாடுமே பிரச்சினைகளிலும் பூசல்களிலும் சிக்கித் தவிக்கின்றது.

புத்திஜீவிகளை முழு இலங்கையுமே கௌரவித்தது ஆனால் இன்று இந்நாட்டில் மூளைசாலிகளுக்கு உரிய இடம் வழங்கப்படுவதில்லை மேலும் அரச வெகுஜன தொடர்பு சாதனங்களோ எமது கட்சிக்குள் பூசல் இருப்பதாகவும் பொய் வதந்திகளை கூறிவருகின்றனர் என்று தெரிவித்தார்.

# சொந்த மண்ணில் வாழ்வது பெருமைக்குரிய விடயம்

## இந்தியாவிலிருந்து திரும்பியபெண்

(வவுனியா)

முன்னர் தாக்கி அனுப்பி வைத்தார்கள். இப்போது அகதிகளுக்கான ஐ.நா.அமைப்பின் தீவிர அவதானிப்பின் பின்னர் எம்மை வேறு விதங்களில் நிர்ப்பந்தம் செய்து அரசாங்க அதிகாரிகள் இலங்கைக்கு அனுப்பி வைக்கிறார்கள்.

இவ்வாறு தமிழகஅகதிமுகாம் ஒன்றிலிருந்து சமீபத்தில்வந்து சேர்ந்த ஞானப்பிரகாசம் மேரியோசெப் என்ற (வயது 46) பெண்மணி தெரிவித்தார்.

கோயமுத்தூர் மாவட்டத்தில் திருமூர்த்தி நகரில் உள்ள அகதி முகாமில் தங்கியிருந்துவிட்டு இரண்டு வருடங்களின் பின்னர் கப்பல் மூலம் திருக்கோணமலை வந்து சேர்ந்த இந்தப் பெண்மணி, கடந்த 7ஆம் திகதி தமது சொந்த இடமான கிளிநொச்சி செல்வதற்காக வவுனியா வந்தபோது அகதி முகாமில் தமக்கு ஏற்பட்ட கொடுமைகளை விபரித்தார்.

அகதிகளுக்கான ஐ. நா. அமைப்பினர் தீவிர கவனம் எடுப்பதற்கு முன்னர் எமது முகாமிற்கு வந்த கலெக்டரும் மற்றைய அதிகாரிகளும் எம்மைத் தாக்கி பஸ்ஸில் ஏற்றி வந்து கப்பல் மூலம் இலங்கைக்கு அனுப்பி வைப்பதற்கு முயற்சித்தார்கள் நான் மறுத்துவிட்டேன். அதனால் கடுமையாகக் கொடுமைப் படுத்தப்பட்டேன்.

இலங்கையில் சிங்களப்படையினால் அவதிப்பட வேண்டி வரும் என்ற அச்சத்திலேயே மறுத்தேன். அகதிகளுக்கான ஐ நா அமைப்பு எம்மை தீவிரமாக அவதானிக்கத் தொடங்கிய பின்னர் எமக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமை நிறுத்தப்பட்டது ஆனால் எமது பங்கீட்டு உணவுப் பொருளையும் பணத்தையும் தாமதித்துவழங்குவதனாலும் திட்டித் தீர்ப்பதாலும் புதிய

( 3 ஆம் பக்கம் பார்க்க )

**நிலம் அரித்து நீர் மூடும் - மூடாது**
**நலம் அறிந்து மரம் நடுமிடத்து**

# ஈச்சமோட்டை சனசமூக நிலையம்

## பொன்விழா சிறப்பு மலர் 10-10-1992

### யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட ஆணையாளரினதும் ஆசிச் செய்தி

ஈச்சமோட்டை சனசமூக நிலையம் தனது சேவையில் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்தி செய்து பொன்விழாக் காணும் இவ்வேளையில் பொன்விழா மலருக்கு ஆசி கூறுவதில் நான் மிகவும் பெருமிதம் அடைகின்றேன் பொன்விழா எப்பொழுதும் பெருமையுடன் கொண்டாட வேண்டிய விழாவாகும். பத்து வருடங்களுக்கு முன்னர் நான் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராக இருந்த பொழுது இச்சனசமூக நிலையத்துக்கான புதிய கட்டடம் ஒன்றினைத் திறந்து வைத்தபொழுது இச் சனசமூகநிலைய அங்கத்தவர்கள் தமது சமூக மேம்பாட்டில் அக்கறையும் தம்மை அர்ப்பணித்துச் செயற்பட்ட தன்மையும் எனக்கு நினைவுக்கு வருகின்றது. இச்சமயத்தில் கடந்தகாலத்தில் இந்நிலையம் வளர்ச்சிபெற உழைத்த நிர்வாகத்தினருக்கும் அங்கத்தவர்களுக்கும் எனது பாராட்டுக்களைத் தெரிவிப்பதுடன், எதிர்காலத்திலும் இத்தகைய முயற்சிகளைக் கடைப்பிடிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்கிறேன் எதிர்காலத்தில் இந்நிறுவனம் மேலும், மேலும் வளர்ச்சி பெற்று சமூகத்திற்குத்தேவையான கடமைகளை ஆற்றும் எனவும் நம்புகின்றேன்

எனது நல்வாழ்த்துக்கள்

க. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபரும்
மாவட்ட ஆணையாளரும்.
யாழ். மாவட்டம்,

### மாநகர ஆணையாளரின் ஆசிச் செய்தி


ஐம்பதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடும் ஈச்சமோட்டைச் சனசமூக நிலையத்தினைப் பாராட்டுவதில் மாநகரசபையானது பெருமை கொள்கின்றது.

மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் மிகச் சிறப்பாக இயங்குகின்ற நிலையங்களில் இதுவும் ஒன்று.

பல்வேறு சமூகப்பணிகளில் இந்நிலையம் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் மாநகர சபையின் வேலைத்திட்டங்களுக்கும் இந்நிலையம் சிறந்த முறையில் ஒத்துழைப்பு வழங்கிவருகின்றது.

இந் நிலையத்தின் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



### தலைவரின் இதயம் பேசுகின்றது

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பொன்விழாத் தினம் ஈச்சமோட்டை வாழ் மக்களின் ஒரு பொன்னான நாளாகும். எமது நிலையத்தின் செயற்பாடும் வாழ்வும் அந்தளவிற்கு ஒன்றிணைந்துள்ளது

1942 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது நிலையம் இன்று எமது இதயங்கள் பூரிக்கும் வகையில் பெருவளர்ச்சியடைந்துதிகழ்கின்றது நிலையத்தின் உத்தியோகத்தர்கள், உறுப்பினர்கள், பெரியார்கள், பொதுமக்கள் அனைவரும் நல்கிய உன்னத ஒத்துழைப்பே இதற்குக் காரணமாகும்.

இன்றுஎமதுநிலையம் இயங்கி வரும் கட்டடம் 1982 ஆம் ஆண்டு பலரது அரிய முயற்சியால் நிறுவப்பட்டதாகும். கல்வி, கலை, விளையாட்டு ஆகிய துறைகளில் எமது நிலையம் ஆற்றிவரும் சிறந்தசெயற்பாடுகளில் பொது மக்களும் மாணவர்களும் ஆர்வத்துடன் பங்கெடுத்து வருகின்றனர்

எமது நிலையம் சொந்தமாக அமைத்துள்ள விளையாட்டு மைதானத்தில் உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம், கரப்பந்தாட்டம் முதலிய விளையாட்டுக்கள் நடைபெற்றுவருகின்றன. அவற்றில் போட்டிகளிலும் நாம் கலந்துகொண்டு பல வெற்றிகளை ஈட்டியுள்ளோம்.

எமது நிலையத்தில் அரிய நூல்களைக் கொண்ட ஒரு நூல் நிலையம் இயங்கி வருகின்றது பலர் இதன் மூலம் நற்பயன் பெற்றுவருகின்றனர்

எமது கிராம மக்கள் நல்ல தண்ணீர் பெறுவதற்கு நீண்டகாலமாகத் தொலை தூரத்திற்குச் செல்லும் கஷ்ட நிலை இருந்து வந்தது எமது நிலையத்தின் முயற்சியால் யூனிசெப் நிறுவனத்தின் உதவியுடன் ஒரு குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு மக்களின் நல்ல தண்ணீருக்கான நீண்ட நாள் கஷ்டம் தீர்க்கப்பட்டது

எங்கள் நிலையத்தின் பொன்விழா தினத்தில் நாம் மேலும் மக்களுக்கு நற்சேவை ஆற்ற ஆதரவு நல்குமாறு அனைவரையும் வேண்டுகிறேன்.


பொன்விழா பொலிவுற வாழ்த்துக்கள்

**தாசன் அச்சகம்** மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.



பொன்விழா சிறப்புற வாழ்த்துக்கள்

**மொறாயஸ்**

பல் கட்டுபவர்
கண்பரிசோதித்து மூக்குக்கண்ணாடி
வழங்குபவர்கள்

ஸ்தாபிதம் 1962 30 வருட சேவை

யாழ். நகரில் வேறு கிளைகள் இல்லை
வெலிங்டன் தியேட்டருக்கு முன்பாக யாழ்ப்பாணம்

நல்வாழ்த்துக்கள்

**மணியம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
16, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.

பொன் விழா சிறக்க வாழ்த்துகிறோம்

**சாறி சென்ரர்**
15, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

பொன்விழா
சிறப்புற
வாழ்த்துக்கள்

**பொபி ஸ்ருடியோ**
கூழாவடி, ஆனைக்கோட்டை


தொகுப்பு:
**மணியம்** (சி-5200)


### வரி விளம்பரம்

உடன் விற்பனைக்கு உண்டு
HIGH LINE PRIMA, BHIRA
கைலைன் வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3325)


### 45-ம் நாள் நினைவஞ்சலி



### நினைவு கூருகின்றோம்...
### 1992-10-10

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில்
யாழ் கோட்டைப்பகுதியில் இந்தியப்படையினருடான
சமரின்போது வீரச்சாவெய்திய
(தமிழீழ இந்தியப்போரில் களப்பலியான முதல் போராளி)
அன்ரன் இரத்தினம் பரமேஸ்வரன் - வீமன் காமம்
வடக்கு, தெல்லிப்பழை யாழ்)
இதே ஆண்டு இந்தியப்படையினருடனான
நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய


### வெளிவாரி பட்டப் படிப்புகள்

**கல்வியாண்டு 1993 / 94**

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

கலைமாணி *B.A*
விஞ்ஞானமாணி *B sc.*
(புள்ளி விபரவியல்)

மாநகர எல்லைக்குட்பட்ட சனசமூக நிலையங்களில் மிகச் சிறப்பாக இயங்குகின்ற நிலையங்களில் இதுவும் ஒன்று. பல்வேறு சமூகப்பணிகளில்

இந் நிலையத்தின் பணி தொடர வாழ்த்துகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

பொன்விழா பொலிவுற வாழ்த்துகள்

தாசன் அச்சகம் மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

தொகுப்பு:
மணியம் (சி-5200)

## வரி விளம்பரம்

### உடன் விற்பனைக்கு உண்டு

HIGH LINE PRIMA, BHIRA

கைலைன் வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் புறோயிலர் குஞ்சுகள், சேவல் குஞ்சுகளுக்கும் உடன் தொடர்பு ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை மானிப்பாய் (3325)

### டில்கா வாச் வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள். சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு சகல கடிகாரங்கள், றேடியோக்கள் வாங்கப்படும், விற்கப்படும். டில்கா வாச் வேக்ஸ் 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம். (சி-5152)

### ஆண்டு 5 புலமைப்பரிசில்

அடுத்த புலமைப்பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute, 582, Stanley Road Jaffna. (சி 5169)

### பரீட்சை ஆண்டு 4, 5

ஆண்டு 6 அனுமதி மாதிரித் தேர்வும், ஆண்டு 5 (புலமைப் பரிசில் 1993) மாதிரிப் பரீட்சையும் 11-10-92 ஞாயிறு மு. ப. 8-00, மு. ப. 11-00 நடைபெறும். வினாத்தாள்களையும், பயிற்சி நூலையும் பெற்றுக் கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (3339)

### தவறிவிட்டது

அத்தியடிக்கும் ஆஸ்பத்திரி வீதிக்குமிடையில் பொன்னம்பலம் சிவசுப்பிரமணியம் என்பவருடைய அடையாள அட்டையும் மணிப்பேர்சும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து 1026 கே. கே. ஸ் றோட் நாச்சிமார் கோயிலடி என்ற விலாசத்தில் [illegible] (3345?)

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### லெப். கேணல் ராஜன்

(சோமசுந்தரம் - சற்குணம்) மாதகல்

பிறப்பு 14-02-1966 — வீரச்சாவு 27-08-1992

ஈழ மண்ணை மீட்டெடுக்க எந்தமிழர் துயர் துடைக்க
வேதமென்று வந்தவரை வென்று நின்றான் - ஆழமுடன்
போராடிப் போராடிப் புதுமை பல செய்த
வீராதி வீரனிவன்

இரும்பு மனமுடைய அரும்பு நகையுடைய
கரும்பு போன்ற லெப்டினன்ட் கேணல் - வரும்போது
போராளிகளெல்லாம் பொங்கி யெழுவார்கள்
தாராளன் தன்னைக்கண்டு

சிங்கள வெறியரிடம் சிறுத்தையைப் போற்பாய்ந்து
வெங்கள மீதினிலே வெற்றி கண்டான் - பங்கமில்லா
வீரத் தமிழ் மறவன் வெற்றிவாகை சூடுவதில்
சூரத் தமிழ் புலியே

இன் சொல்லால் இனி தானதன் பேச்சால் யாவரையும்
அன்பாலே அணைத்த அருந்திற லோன் - என்பெல்லாம்
உருக்கிச் சென்றுவிட்ட உத்தமனே உன்பிரிவு
சுருக்கிச் சொல்லமுடி... யா

இவ் வைபவத்தில் போராளிகள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

— குடும்பத்தினர்

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு. (3333)

## நினைவு கூருகின்றோம்... 1992-10-10

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில்
யாழ் கோட்டைப்பகுதியில் இந்தியப்படையினருடான
சமரின்போது வீரச்சாவெய்திய
(தமிழீழ இந்தியப்போரில் களப்பலியான முதல் போராளி)

அன்ரன் இரத்தினம் பரமேஸ்வரன் - வீமன்காமம் வடக்கு, தெல்லிப்பழை யாழ்)

இதே ஆண்டு இந்தியப்படையினருடனான
நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய

நிமல் (பொன்னையா பூபாலசிங்கம் - தெற்பலி, மிருசுவில், யாழ்)

கோப்பாயில், இந்தியப்படையினருடனான
நேரடிச் சமரின்போது விழுப்புண் அடைந்த நிலையில்
சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய
(மகளிர் படைப்பிரிவில் வீரச்சாவெய்திய முதல் போராளி)

2 ஆம் லெப். மாலதி (சகாயசீலி பேதுறு - ஆட்காட்டிவெளி, அடம்பன். மன்னார்)

இதே பகுதியில் நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய

தயா (சலேற்றம்மா செபஸ்ரியான் - பெரியநாவற்குளம் மன்னார்)

ரஞ்சி (யோகம்மா கதிரேசு - அலைக்கல்லுப்போட்ட குளம், ஓமந்தை, வவுனியா)

2 ஆம் லெப். கஸ்தூரி (வதனீஸ்வரிகோபாலபிள்ளை 765, கட்சன் வீதி வட்டக்கச்சி, கிளிநொச்சி)

யாழ் கோட்டைப் பகுதியில் இந்தியப்படையினர்
மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்ட
தமிழ்ப் பொதுமகன்

1988-ம் ஆண்டு வவுனியா - கொந்தக்காரன்குளத்தில், இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

மேஜர் தாடிபாலா (சண்முகம் இராசரத்தினம் - அனந்தர் புளியங்குளம் - வவுனியா)

கப்டன் சைமன்/ராசா (தொம்மை அந்தோனி - அடம்பன்தாழ்வு - மன்னார்)

லெப். பீற்றர் (பிரான்சிஸ் யோகராசா - பரப்புக்கடந்தான் - மன்னார்)

லெப். ஆனந் (இ. ரகு - குருமண்காடு - வவுனியா)

லெப். பார்த்தசாரதி (நடராசா யோகநாதன் - 3-ம் வட்டாரம், முள்ளியவளை)

2-ம் லெப். இராசதுரை/எம். ஜி. ஆர் (மனுவல் அந்தோனிதாசன் - பரப்புக்கடந்தான் - மன்னார்).

2 ம் லெப். ஜெயந்தன் (பிலிப்பு பிரான்சிஸ் - நாவற்குளம் - மன்னார்)

2-ம் லெப். ராஜேந்தர் (மாரியப்பன் சிறிதரன் - பள்ளிக்குடியிருப்பு - மன்னார்)

2-ம் லெப் றியாஸ் (சுப்பிரமணியம் விக்கினேஸ்வரன் - நானாட்டான் - மன்னார்)

2-ம் லெப். கருணா (சவரியோகரட்ணம் - கன்னாட்டி மன்னார்)

ரவிகாந் (அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் - பாப்பாமோட்டை - மன்னார்)

2-ம் லெப். சிவா (எட்வேட் யோசப் விவேகானந்தநகர் - கிளிநொச்சி)

1990-ம் ஆண்டு காங்கேசன்துறையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய

இந்திரன் (கனகரத்தினம் இந்திரவேல் - வியாங்கொடை, தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

...ச்செழுவில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப்பிரிந்த-

தயாளன் (துரைசிங்கம் ஜீவன் - சேகரம் வீதி, தையிட்டி, காங்கேசன்துறை - யாழ்)

1991-ம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்ட - மட்டு வந்தாறுமூலையைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

### தமிழீழ விடுதலைப்புலிகள்

(சி-5198)

## வெளிவாரி பட்டப் படிப்புகள்

### கல்வியாண்டு 1993 / 94

இலங்கைப் பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

கலைமாணி B.A
விஞ்ஞானமாணி B sc.
(புள்ளி விபரவியல்)
வணிகமாணி B·com.

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்

விரிவுரைகள் 11. 10. 1992-ல் ஆரம்பமாகின்றன

விபரங்களுக்கு;-

உதவிப் பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்ள விரும்பும் மாணவர்களுக்கான பதிவுகள் இதுவரை பேராதனைப் பல்கலைக்கழகத்தால் கோரப்படவில்லை என்பதனை மாணவர்களுக்கு அறியத் தருகின்றோம். எனவே விளம்பரங்களை நம்பி அலையாதீர்கள் பதிவுகள் கோரப்பட்டதும் நாங்கள் உங்களுக்கு அறிவிப்போம்.

★ பட்டப்படிப்புகளுக்கென சிறந்து விளங்கும் நிறுவனம் யாழ்நகரில் இதுவே

(சி 5194)

### சிந்தனைக்கு

எண்ணிப் பார்க்க இதயம் வேண்டும், இயக்கிச் செல்லத் தெளிவு வேண்டும். செய்து முடிக்க வலிமை வேண்டும்.

—ஜுனியஸ்

# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்-10- 10- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## அமைச்சர் ஹமீத் எங்கே நிற்கிறார்?

"பாராளுமன்றத் தெரிவுக்குழு இனப்பிரச்சினையின் தீர்வு தொடர்பாக ஒருமித்த கருத்தொன்றை உருவாக்குவதற்கு வழி சமைத்துக் கொடுக்கும் முகமாக சர்வகட்சி மாநாடு தனது அமர்வுகளை இடைநிறுத்தியுள்ளது. முழுத் தீர்வுத் திட்டத்தையும் தயாரிப்பதில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவிற்கு உதவும் முகமாகவே இச் சர்வகட்சி மாநாட்டின் அமர்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன." இவ்வாறு அமைச்சரும் சர்வகட்சி மாநாட்டின் தலைவருமான ஏ. சி. எஸ். ஹமீத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஏ. சி எஸ் ஹமீத்தின் இவ் அறிவிப்பானது வேடிக்கையானதொன்றாகும். ஏனெனில் சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இச் சர்வகட்சி மாநாடு பற்றியும் அதன் செயற்பாடு பற்றியும் எவருமே கவலை கொள்ளாத, அதாவது இவ்வாறான ஒரு மாநாடு நடைபெறுகிறதென மக்கள்மறந்திருந்த வேளையில் இவ் அறிவிப்பை வெளியிடுவதே இதற்குரிய காரணமாகும்.

சர்வகட்சி மாநாடு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை சுமார் 81 தடவை முழு அளவினதான மாநாடாகவும், பல தடவை தலைவர்களுடைய சந்திப்பாகவும் நடைபெற்றுள்ளது இதற்கென சுமார் 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலவீடு செய்யப்பட்டது.

ஆனால் சுமார் இரண்டு வருடம் வரை சீராக இயங்கிய இம் மாநாட்டினால் இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவிதமுன்னேற்றகரமான முடிவோ அன்றி நடவடிக்கையோ மேற்கொள்ளப்படவில்லை. அதாவது சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டதன் பிரதான நோக்கத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டுகளும் உள்ளன. சர்வகட்சி மாநாட்டில் தவறாது கலந்துகொண்ட தமிழ்க்குழு உறுப்பினர் ஒருவரிடம் அவர் நண்பர் கேட்டாராம். 'பிரயோசனம் அற்றது எனத்

## டிக்சிற் அன்றுவிட்ட தவறை இந்தியா இனிமேல்மீண்டும்செய்யாது

**- குல்தீப் நய்யார்**

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தை இராணுவ ரீதியாகவெற்றிகொள்ள இந்தியா அனுமதிக்காது என்று முன்னாள் இந்தியத் தூதுவர் ஜே என். டிக்சிற் தீர்மானம் எடுத்ததன் மூலம் இழைக்கப்பட்ட தவறை இந்தியா மீண்டும் செய்யாது என்று இந்தியாவுக்கான பிரிட்டனின் முன்னாள் தூதுவரும் பிரதி எழுத்தாளருமான குல்திப் நய்யார் கூறியுள்ளார்.

பங்களாதேசிலிருந்து வெளிவரும் டெய்லி ஸ்ரார் பத்திரிகைக்கு எழுதியுள்ள கட்டுரையொன்றில் மேலும் அவர் குறிப்பிடுகையில், புதுடில்லியின் கடந்த கால நடவடிக்கைகள் இது விடயத்தில் கறைபடிந்துபோயுள்ளது என்பறதில் எந்தச் சந்தேகமுமில்லை என்றும், திருமதி இந்திரா காந்திகாலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட மடமைத்தனமான கொள்கைகளால் சிறிலங்கா அரசை மிரட்டுவதன் மூலம் தமிழர்களோடு இணக்கப்பாடொன்றைக்காண நிர்ப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார் உணவுப் பொட்டலம் போட்டதன் மூலம் இலங்கையின் இறைமையில் இந்தியா தலையிட்டது. புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டன.

ஆனால் புதுடில்லி இப்போது பாடம் கற்றுள்ளது. எனவே அப்போது விட்ட தவறை இந்தியா இப்போது மீண்டும் செய்யாது.

மேலும் புதுடில்லியினால் கொழும்புக்கென நியமிக்கப்பட்ட தூதுவர்களில் பலரும் வைஸ்ராய் போல செயற்பட்டதனால் இந்திய சிறிலங்கா உறவுகளில் இடைவெளி ஏற்பட்டது என்றும் இப்போது அந்தநிலை மாறிவிட்டது என்றும்அவர் குறிப்பிட்டுள்ளார்

பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையில்

## ஊவாமாகாணத்தமிழர்களில் பலர் காணாமற் போயினர்

(பதுளை)

பயங்கரவாத தடுப்பு நடவடிக்கையின் போது ஊவா மாகாணத்தில் பல தமிழ்க் குடும்பங்களில் பலர் காணாமல் போயுள்ளனர் இவ்வாறு காணாமல் போனவர்கள் பற்றி எவ்வித தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை அதே வேளை இவ்வாறான குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பெரும் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்றனர்

இவ்வாறு இ. தொ. கா. பதுளை மாவட்ட அரசியல் பிரிவு அமைப்பாளர் எம் எஸ். முத்தையா விடுத்துள்ள அறிக்கை யொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது இத்தகைய குடும்பங்களுக்கு புனர்வாழ்வு உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனக் கோரினோம் இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதியின் கவனத்திற் கொண்டு வந்தோம் ஜனாதிபதியின் செயலகம் புனர்வாழ்வு அமைச்சின் பார்வைக்கு அனுப்பி உள்ள போதும் இதுவரை எவ்வித பதிலும் இல்லை இது தொடர்பாக புனர்வாழ்வு அமைச்சு காலம் தாழ்த்தாது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஓய்வூதியத் திட்டத்தை ரத்தாக்க அரசுக்கு உலகவங்கி ஆலோசனை

**— தினேஷ் குணவர்த்தனா**

(கண்டி)

ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை ரத்துசெய்து விடும்படி உலகவங்கி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது என்று கண்டியில் அண்மையில் அரசாங்க ஓய்வூதியர்களின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், அரசாங்கம் என்னதான் கூறினாலும் உலகவங்கியின் ஆலோசனை அடங்கிய ஆவணங்களை நான் பார்வையிட்டேன் அதில் அரசாங்கத் துறை ஊழியர்களின் ஓய்வூதியத்தை ரத்துசெய்து விடும்படி கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஓய்வூதிய காரர்களுக்கு மாதாந்தம் வழங்குவதாக ஏற்றுக்கொண்ட ரூ.260 விசேட அலவன்சு இன்னும் [...]தைச் சுட்டிக்காட்டிய அவர் இந்தமுடிவு உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இது அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட முடிவு என்றும், இது பாராளுமன்ற நடவடிக்கை பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது என்றும், சுட்டிக் காட்டிய அவர் பதவிக்கு வரும் எந்தவொரு அரசும் நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டம் என்பதையும் அவர் விளக்கினார்.

விவசாய ஓய்வூதியத் திட்டம்

## இரு பெண்களுக்கு மரணப் பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் விவசாய காப்புறுதிச் சபையால் யாழ்ப்பாணத்தில் இரண்டு பெண்களுக்கு அண்மையில் மரணப் பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன

தாவடி வடக்கைச் சேர்ந்த [...] புத்தூரைச் சேர்ந்த திருமதி ந நாகநந்தினி ஆகிய இருவருக்கும் இவ்வாறு மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கான ஓய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை சுமார் 371 [...]

## மீராவோடை பாடசாலைக்கு தமிழ்மாணவர்செல்ல அச்சம்

(மட்டக்களப்பு)

வாழைச்சேனைப் பகுதியில் தமிழ், முஸ்லிம் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள மீராவோடை தமிழ் பாடசாலை மீண்டும் அக்கட்டடத்திலேயே இயங்கத்தொடங்கியுள்ள போதிலும் மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதற்கு பெற்றோர் அச்சம் தெரிவித்துள்ளனர்.

1990 ஜூன் மாதத்தில் தொடங்கிய அசம்பாவிதத்தினை தொடர்ந்து அப்பகுதியில் உள்ள தமிழ் மக்கள் அனைவரும் அயல் கிராமங்களிலேயே இன்றும் அகதிகளாக தங்கியுள்ளனர் சொந்த இடங்களுக்கு இன்னும் மீளக் குடியேறவில்லை இதனால் மீராவோடை தமிழ்ப் பாடசாலை பன்றிமடு என்ற இடத்திலேயே தற்காலிகமாக இயங்கி வந்தது மீளக் குடியேறவே அஞ்சுகின்ற நிலையில் மீராவோடை தமிழ்ப் பாடசாலையை மீண்டும் பழைய இடத்திற்கு மாற்றப்பட்டிருப்பது குறித்து அச்சம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வாழைச்சேனைகோட்ட உதவிப்பணிப்பாளர் குழு ஒன்று அப்பகுதிக்குச் சென்ற போது பெற்றோர் இது தொடர்பாக ஆட்சேபம் தெரிவித்துள்ளனர்.

வீடுகள் உடைக்கப்பட்டு பாடசாலைக் கட்டடம் மட்டுமே அரைகுறை நிலைமையில் எஞ்சியிருக்கும் இப்பகுதிக்கு அருகிலேயே ஊர்காவல் படையினரின் காவலரண்களும் உள்ளன இங்கு பாதுகாப்பு இல்லை என்பதை கடந்தகால சம்பவங்களே உணர்த்தியுள்ளன இந்நிலையில் இப்பாடசாலைக்கு எவ்வாறு எமது பிள்ளைகளை அனுப்புவது. இப்பாடசாலையை மீராவோடை ஆஸ்பத்திரி கட்டடத்திற்காவது மாற்றித்தரும்படி பெற்றோர் அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முகாம்களில் சுத்தம் பேண கருத்தரங்கில் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சுகாதார விதிகளை நன்கு பேணுவதன்மூலமும்சுகாதாரப் பழக்க வழக்கங்களை அனுசரிப்பதன் மூலமும் எழுபத்தைந்து வீதமான நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் அகதி முகாம்களில் உள்ள மக்கள் அனைவரும் இந்த முகாம்களை உங்கள் சொந்த வீடு போலக் கருதி சுத்தமாக வைத்திருக்க வேண்டியது அவசியம் இவ்வாறு யாழ். பிராந்திய சுகாதாரக் கல்வி அதிகாரி கா. வைத்தீஸ்வரன் குறிப்பிட்டார்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அகதிகள் முகாமில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில்; அகதி முகாம்களில் சுற்றாடல்,சூழல் சுகாதார அதிகாரிகளால் மட்டும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தீர்த்து விட முடியாது என்றும் குறிப்பிட்டார்.

மானிப்பாய் சுகாதாரவைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ் சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் சுகாதார பரிசோதகர் ஏ. ஏ. ஜோன், இராசநாயகம்பிள்ளை, போரூட் நிறுவனப் பிரதிநிதி, செஞ்சிலுவை சங்க பிரதிநிதி ஆகியோரும் உரையாற்றினர்.

## 2-ம் லெப். மாலதி 5ஆம் ஆண்டுநினைவு

(வடமராட்சி கிழக்கு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்முதல் வீரச்சாவெய்திய பெண் போராளியான 2 ஆம் லெப். மாலதியின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், உருவப் படத் திறப்பு வைபவமும் இன்று மாலை 5 மணிக்கு வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

மாலுசந்திக்கு அருகாமையில் உருவப்படம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அஞ்சலிக் கூட்டம் செல் [...]

## ஈச்சமோட்டை சனசமூக நிலைய பொன்விழா

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பொன்விழா நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு நிலையமைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி வைப்பார். பாஷையூர் கடற்புலிகள் கிராமியப் பொறுப்பாளர் திரு. கண்ணபிரான் தேசியக்கொடியையும், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.வே.பொ, பாலசிங்கம் நிலையக் கொடியையும் ஏற்றிவைப்பார். இதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள் சனசமூக [...]

இவ் அறிவிப்பை வெளியிடுவதே இதற்குரிய காரணமாகும்.

சர்வகட்சி மாநாடு ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இதுவரை சுமார் 81 தடவை முழு அளவின தான மாநாடாகவும், பல தடவை தலைவர்களுடைய சந்திப்பாகவும் நடைபெற்றுள்ளது இதற்கென சுமார் 18 லட்சத்து 40 ஆயிரம் ரூபாவிற்கு மேல் செலவீடு செய்யப்பட்டது.

ஆனால் சுமார் இரண்டு வருடம் வரை சீராக இயங்கிய இம் மாநாட்டினால் இனப்பிரச்சினை தொடர்பாக எந்தவிதமுன்னேற்றகரமான முடிவோ அன்றி நடவடிக்கையோ மேற்கொள்ளப்படவில்லை. அதாவது சர்வகட்சி மாநாடு கூட்டப்பட்டதன் பிரதான நோக்கத்தில் எந்தவித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

இதற்குச் சிறப்பான எடுத்துக்காட்டுகளும் உள்ளன. சர்வகட்சி மாநாட்டில் தவறாது கலந்து கொண்ட தமிழ்க்குழு உறுப்பினர் ஒருவரிடம் அவர் நண்பர் கேட்டாராம். 'பிரயோசனம் அற்றது எனத் தெரிந்து கொண்டு ஏன் இம் மாநாட்டில் கலந்து கொள்கின்றாய்' என்று. அதற்கு அத் தமிழ்க் குழுவின் பிரதிநிதி அதாவது அவரது -நண்பர்-'' நல்ல சிற்றுண்டியும், ரீ யும் தருகின்றார்கள்'' எனத் தெரிவித்தாராம். அதாவதுசர்வகட்சி மாநாட்டுமண்டம் அதில் கலந்து கொண்டவர்களுக்கு இலவசமாக உணவு போடும் ஒரு 'கன்ரீனாக' இருந்ததே ஒழிய ஒரு தீவிரமான பிரச்சினையை ஆராயும் மண்டபமாக இருக்கவில்லை.

இந்நிலையில்தான் பாராளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை அரசாங்கம் நியமித்தது, அதாவது இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு குறித்து சர்வகட்சி மாநாட்டினால் ஒரு நகர்ச்சியும் ஏற்பட முடியாத நிலையிலேயே எதிர்க்கட்சி உறுப்பினர் மங்களமுனசிங்காகொண்டுவந்த தனிநபர் பிரேரணையை அரசாங்கம் பற்றிப்பிடித்துக்கொண்டது. இனப்பிரச்சினைக்கான தீர்வைமுன்வைப்பதற்கானபொறுப்பை அக்குழுவிடம் சுமத்தியது.

இதேவேளை பாராளுமன்றச் செயற்குழு நியமிக்கப்பட்ட வேளையில், சில மாதங்களுக்குள் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படும் எனத்தெரிவிக்கப்பட்டது. ஆனால், குழு நியமிக்கப்பட்டும் ஒருவருடத்திற்கு மேல் சென்றது ஆரம்பத்தில் ஏதோ சாதனை புரியப் போவதாக செயற்படத் தொடங்கிய பாராளுமன்றத் தெரிவுக்குழு இப்பொழுது என்ன செய்கிறது, எது செய்கின்றது எனத்தெரியவில்லை. மேலும்எப்பொழுது கூடுகின்றது, எதை விவாதிக்கவுள்ளது என்பது குறித்தே தகவல் கிடைப்பதில்லை அதுகுறித்து எவரும் கவலைப்படுவது மில்லை. அதாவது மக்களும் பத்திரிகைகளும் இவற்றின் செயற்பாட்டில் முற்றாக நம்பிக்கை இழந்து விட்டனர்.

இந்நிலையில் மக்கள் எப்பவோ மறந்த சர்வகட்சி மாநாட்டை இப்பொழுது அமைச்சர்ஞாபகம் ஊட்டுவதும் மக்கள் நம்பிக்கை இழந்துவிட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டிற்கு குந்தகம் விளைவிக்காமல் இருக்க வென சர்வகட்சி மாநாடு கூடுவதைஒத்தி வைக்கப்படுகின்றதெனக் கூறுவதையும் அமைச்சரின் வேடிக்கைப் பேச்சு எனக் கூறாமல் வேறு எவ்வாறு கூறுவது இதேவேளை. ஒரு சிரேஷ்ட அமைச்சரான ஹமீத் தான் கண்ணை மூடிக்கொள்வதால் உலகமே இருண்டுவிட்டது என எண்ணுவது சரியில்லை.

---

ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தை ரத்து செய்து விடும்படி உலக வங்கி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளது என்று கண்டியில் அண்மையில் அரசாங்க ஓய்வூதியர்களின் கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசிய மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறினார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், அரசாங்கம் என்னதான் கூறினாலும் உலகவங்கியின் ஆலோசனை அடங்கிய ஆவணங்களை நான் பார்வையிட்டேன் அதில் அரசாங்கத் துறை ஊழியர்களின் ஓய்வூதியத்தை ரத்து செய்து விடும்படி கோரப்பட்டுள்ளது.

ஏற்கனவே ஓய்வூதிய காரர்களுக்கு மாதாந்தம் வழங்குவதாக ஏற்றுக்கொண்ட ரூ.260 விசேட அலவன்சு இன்னும் வழங்கப்படவில்லை என்ப

## — தினேஷ் குணவர்த்தனா

தைச் சுட்டிக்காட்டிய அவர் இந்தமுடிவு உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இது அமைச்சரவையினால் மேற்கொள்ளப்பட்ட முடிவு என்றும், இது பாராளுமன்ற நடவடிக்கை பதிவேட்டில் குறிக்கப்பட்டுள்ளது என்றும், சுட்டிக் காட்டிய அவர் பதவிக்கு வரும் எந்தவொரு அரசும் நடைமுறைப் படுத்த வேண்டிய திட்டம் என்பதையும் அவர் விளக்கினார்.

விவசாய ஒய்வூதியத் திட்டம்

# இரு பெண்களுக்கு மரணப் பணிக்கொடை

(யாழ்ப்பாணம்)

விவசாயிகள் ஒய்வூதியத் திட்டத்தின்கீழ் விவசாய காப்புறுதிச் சபையால் யாழ்ப்பாணத்தில் இரண்டு பெண்களுக்கு அண்மையில் மரணப் பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன

தாவடி வடக்கைச் சேந்த திருமதி வே. இராஜேஸ்வரி புத்தூரைச் சேர்ந்த திருமதி ந நாகநந்தினி ஆகிய இருவருக்கும் இவ்வாறு மரணப் பணிக்கொடை கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

விவசாயிகளுக்கான ஒய்வூதியத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் இதுவரை சுமார் 371 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் இதில் பதினேழு விவசாயக் குடும்பங்கள் யாழ்ப்பாண மாவட்டத்தில் விவசாயப் பணிக்கொடைகளைப் பெற்றுள்ளதாகவும் விவசாய ஓய்வூதியத்திட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்ப் பகுதிகளில் கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவருக்கும், வவுனியா மாவட்டத்தில் இருவருக்கும், மன்னார் மாவட்டத்தில் ஆறு பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏழு பேருக்கும் திருக்கோணமலை மாவட்டத்தில் ஒருவருக்கும், அம்பாறை மாவட்டத்தில் இருபத்தொரு பேருக்கும் விவசாய ஒய்வூதியத் திட்ட மரணப் பணிக்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன. (42)

# ஆயுர்வேத வைத்தியசாலை முழுநேரமாக இயங்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையால் நிர்வாகிக்கப்பட்டு வரும் ஏழு ஆயுர்வேத வைத்தியசாலைகளும் இனிமேல் முழுநேரமாக இயங்கும்.

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன தற்பொழுது யாழ் நகரமத்தியிலும் நல்லூர் வண்ணார்பண்ணை, பாஷையூர், அரியாலை கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளிலும் மாநகரசபையின் இலவசஆயுர்வேத வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் கடமைபுரியும் ஆயுர்வேத வைத்தியர்கள் தற்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

## மாதாந்த உதவிப் பணம் பெறுவோர் தொடர்புகொள்க

(யாழ்ப்பாணம்)

தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்து மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்களுக்கான உதவிப்பண அட்டை மீளாய்வு அந்தந்த கிராம சேவகர்களினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது

சம்பந்தப்பட்டவர்கள் குடும்ப அட்டையுடன் சமுகம் தருமாறு தீவக கிராம சேவகர்கள் கேட்டுக்கொள்கின்றனர். அத்துடன் மீளாய்வின் பின்பே அடுத்த கொடுப்பனவுகள் (ஆடி, ஆவணி மாதங்களிற்கானது) நடைபெறும் என்றும்அறிவிக்கப்பட்டுள்ளது. 88

# ஓவிய, சிற்பக் கண்காட்சி

(நல்லூர்)

யாழ் மாவட்ட பாடசாலைகளுக்கிடையேயான ஓவிய, சிற்பக் கண்காட்சி 16. 10. 92 வெள்ளிக்கிழமைகாலை 10 00 மணிக்கு யா/ கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக யாழ் பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ சுந்தரலிங்கம் சகல கோட்டங்களுக்கும் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கு தெரியப்படுத்தி உள்ளார்

கோட்டமட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட சிற்ப, ஓவியங்களை கோட்டங்களுக்குப் பொறுப்பான சித்திர சேவைக்கால ஆலோசகர்களின் உதவியுடன் இங்கு காட்சிப்படுத்துமாறும் அவர் கோரியுள்ளார்.

# முன்னாள் பிரதம நீதியரசர் தம்பையா காலமானார்

முன்னாள் பிரதம நீதியரசர் செ. டி. தம்பையா கடந்த ஞாயிறன்று இரவு பிரிட்டனில் காலமானார்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர். இலங்கைப் பல்கலைக் கழகத்திலும் சட்டக் கல்லூரியிலும் பயின்று பட்டங்களைப் பெற்றார்.

1954 இல் வழக்கறிஞர் தொழில் பார்க்க ஆரம்பித்த தம்பையா நீதித்துறையில் பல உயர்பதவிகளை வகித்தார். 1991 ஆகஸ்ட் 20 ஆம் திகதி பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் வண்டனில் நடைபெற்றன

---

ஆசிரியை

க்குச்சாதகமாக பயன் படுத்தி மேற்படி கொலையை செய்து விட்டு மேற்படி கோவிலில் பக்தர்களாக நடித்து காவடி எடுத்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் மேற்படி நபர்களைக் கைது செய்த விடுதலைப் புலிகள் தீவிர விசாரணைகளை மேற்கொண்டபோது மேற்படி நான்கு பேரும் செல்வி தர்சனாவின் கொலையில் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தமை நிரூபிக்கப்பட்டுள்ளது இதனைத் தொடர்ந்தே மேற்படி நான்கு கொலையாளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் மரண தண்டனை தீர்ப்பை வழங்கியுள்ளனர்.

இதேவேளை மேற்படி கொலைச்சம்பவம் தொடர்பாக குலசேகரம் மகேந்திரராசா என்பவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு குற்றவாளியாகக் காணப்பட்டு மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்ட பின் கடந்த 09-05-1992 இல் சுகயீனம் காரணமாக அங்கு மரணமானார் என அவர் மேலும் தெரிவித்தார். (சு)

---

டார்.

சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய அகதிகள் முகாமில் நடைபெற்ற சுகாதாரக் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர்

## 2-ம் லெப். மாலதி 5ஆம் ஆண்டுநினைவு

(வடமராட்சி கிழக்கு)

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் முதன்முதல் வீரச்சாவெய்திய பெண் போராளியான 2 ஆம் லெப். மாலதியின் ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், உருவப் படத் திறப்பு வைபவமும் இன்று மாலை 5 மணிக்கு வடமராட்சியில் நடைபெறவுள்ளது.

மாலுசந்திக்கு அருகாமையில் உருவப்படம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அஞ்சலிக் கூட்டம் செல்லையா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

அஞ்சலிக் கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (36)

## கூட்டம்

தமிழீழ கல்விமேம்பாட்டுப் பேரவையின் மாதாந்தக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10-00 மணிக்கு தமிழீழக் கல்விக் கழகப் பணிமனையில் நடைபெறவுள்ளதால் தவறாது சகலபேரவைப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும்படி செயலாளர் கேட்டுள்ளார்.

---

சொந்த

நிர்ப்பந்தம் செய்யப்பட்டது.

இந்தத் தொல்லை தாங்க முடியாமலேயே நாம் கலெக்டரிடம் சம்மதித்துப் புறப்பட்டு வந்தோம் என்று அவர் கூறினார்.

எமது சொந்த மண்ணில் வாழ்வது பெருமைக்குரிய விடயம் என்று தெரிவித்த அவர் அகதி முகாமில் தம்முடன் தங்கியிருந்த தனது மகன் ஞா. ஞானசிலன் கோயமுத்தூர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுச் சென்று மூன்று மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்றும் தனது கணவன் 1986 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தின் ஷெல் தாக்குதலினால் உடல் சிதறி இறந்தார் என்றும் தெரிவித்தார். (தி)

---

ஆயுதம்

அரசாங்கம் பேசமாட்டாது. வன்முறையின் மூலம் யார் பிரச்சினைக்குத் தீர்வு காண முயல்கிறார்களோ அவர்களோடும் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தாது என்றும் பிரட்மன் மேலும் குறிப்பிட்டார்.

---

## ஈச்சமோட்டை சனசமூக நிலைய பொன்விழா

(யாழ்ப்பாணம்)

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் பொன் விழா நிகழ்ச்சிகள் இன்று பிற்பகல் 1 மணிக்கு நிலையமைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இவ்விழாவில் யாழ். மாவட்டப் பிரதி ஆணையாளர் திரு. து. வைத்திலிங்கம் மங்கள விளக்கேற்றி வைப்பார். பாஷையூர் கடற்புலிகள் கிராமியப் பொறுப்பாளர் திரு. கண்ணபிரான் தேசியக்கொடியையும், யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு.வே.பொ, பாலசிங்கம் நிலையக் கொடியையும் ஏற்றிவைப்பார். இதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும்.

இரவு நிகழ்ச்சிகள் சனசமூக நிலைய கலையரங்கில் 7 மணிக்கு ஆரம்பமாகும். இவ்விழாவில் உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சு. டிவகலாலா மங்கள விளக்கேற்றுவார். பிரதமவிருந்தினராக யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரும், சிறப்புவிருந்தினர்களாக கடற்புலிகளின் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. மறவன், திரு. காரைசுந்தரம்பிள்ளை, திரு. இ ஜெயராஜ், திரு. அ. கனகசபாபதி, திரு. குணசிங்கம் ஆகியோர் கலந்துகொள்வர்

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் இன்று காலை 6மணிக்கு ஆண்களுக்கான மரதன் ஓட்டப்போட்டியும் இடம் பெறவுள்ளது

---

மன்னார்

மன்னார் -கற்பிட்டி படகுச் சேவையில் மக்களைப் பயணம் செய்யவிடாது தடுத்து விட்டு இவ்வாறு சூறையாடப்பட்ட பொருள்களை படகுகளில் ஏற்றிச் சென்றதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

---

1993

புதிதாக நிறுவப்படும் பிரதேச செயலகங்கள் உட்பட பொது நிர்வாக செலவினங்களுக்காக 2000 கோடி ரூபா ஒதுக்கப்படும் எனவும், வரவு -செலவுத் திட்டத்தில் இதுவே ஆகக் கூடுதலான ஒதுக்கீடு ஆகும்

பாதுகாப்பு செலவின ஒதுக்கீடு இரண்டாம் இடத்தில் அதாவது 1800 கோடி ரூபாவாக இருக்கிறது புனர்வாழ்வு புனர் நிர்மாண அமைச்சுக்கு 600 கோடி ரூபாவும், மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சுக்கு 600 கோடி ரூபாவும், காணி நீர்ப்பாசன மகாவலி அபிவிருத்தி அமைச்சுக்கு 580 கோடி ரூபாவும், சுகாதார மகளிர் விவகார அமைச்சுக்கு 500 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஈழநாதம்

# பணிப்பெண்களாக சென்றோர் லெபனானில் பெரும் அவதி

## சொல்லொணா சித்திரவதைகள்

(மாத்தறை)

பலப்பிட்டியில் இருந்து தொழில் ஏஜென்சி மூலம் லெபனானுக்கு தொழில் வாய்ப்புப் பெற்றுச் சென்ற சுமார் ஐம்பது இலங்கைப் பெண்கள் இன்று அந்த நாட்டிலே அங்கவீனர்களாக்கப்பட்டும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டும் நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர்.

இவ்வாறு தென் மாகாண மாதாந்தக் உட்டத்தில் எதிர்க்கட்சி உறுப்பினரான பியதாச ரத்னபால பேசும் போது தெரிவித்தார்.

தொழில் முகவர் நிலையமொன்றின் மூலம் லெபனான் சென்று ஏமாறிய யுவதி ஒருத்தி இங்கு திரும்பிவந்து அவரிடம் கையளித்த கடிதம் ஒன்றை சபையில் சமர்ப்பித்து உரையாற்றும் போது அவர் இதைத் தெரிவித்தார். முகவர் நிலைய பொறுப்பாளர்கள் அராபியர் வீடுகளில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு இலங்கைப் பெண்களை அங்கு கொண்டு சென்று வேலைக்கு அமர்த்துகின்றனர் ஆனால் இவர்களுக்கு வேதனமும் வழங்கப்படுவதில்லை. வீட்டுக்காரர்களால் சித்திரவதைக்கு உட்பட்ட பல பெண்கள் ஆஸ்பத்திரியில் இருப்பதாகவும், சிலர் அங்கவீனர்களாக்கப்பட்டுள்ளதாகவும் சிலர் கர்ப்ப முற்றிருப்பதாகவும் அதை அப்பெண் கண்டதாகவும் தெரிவித்தார்.

இந்நிலைமை குறித்து அந்த யுவதிகள் வீட்டிற்கு கடிதம் கூட எழுத வழியின்றி தவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்

## 31-ம் நாள் நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 16 | 10 |
| — | — |
| 10 | 09 |
| — | — |
| 1957 | 1.92 |

**செல்லத்தம்பி பவானந்ததாஸ்**
[கொந்தக்காரன் குளம், ஓமந்தை]

அப்பா! என்றழைத்து அழும் குழந்தை - இனி
எப்போ உங்கள் முகம் காணும்?
நீர் மேல் குமிழி போல் ஆனதோ நும் வாழ்வு
பார் மீதில் எம்துயரம் யார் பகிர்வார்?

- குடும்பத்தினர்

(சி/5199)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



வீரப்பிறப்பு — 19
வீரச்சாவு — 09

## தமிழீழ மீட்புநிதி சேகரிப்பு

| உதவி அரசாங்க அதிபர் பிரிவு | திகதி | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | திகதி |
|---|---|---|---|
| நல்லூர் | 14- 10- 92 | தெல்லிப்பளை | 19- 10- 92 |
| யாழ்ப்பாணம் | 15- 10- 92 | தீவகம் | 20- 10- 92 |
| கோப்பாய் | 16- 10- 92 | பருத்தித்துறை | 24- 10- 92 |
| உடுவில் | 17- 10- 92 | கரவெட்டி | 24- 10- 92 |
| சண்டிலிப்பாய் | 17- 10- 92 | சாவகச்சேரி | 31- 10- 92 |
| சங்கானை | 18- 10- 92 | பச்சிலைப்பள்ளி | 31- 10- 92 |
| காரைநகர் | 18- 10- 92 | | |

மேற்குறித்த திகதி ஒழுங்கில் ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்கும் நேரடியாகச் சென்று மீட்புநிதி சேகரிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. நேரமும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்.

நிதித்துறை,
தமிழீழ விடுதலைப் புலிகள்.

### விபத்தில்

நேற்று வெள்ளிக்கிழமை முற்பகல் விறகேற்றி வந்த லான்ட் மாஸ்ரரின் பின்புறமாக மோதுண்டதனால் பிரஸ்தாப பெண்மணி காலில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (22)

### வவுனியா

நிலங்களில் சிங்களக் குடியேற்றம் அவசர அவசரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த சில மாதங்களுக்குள் மட்டும் நூற்றுக்கணக்கான சிங்களக் குடும்பங்கள் இப்பகுதியில் குடியேற்றப்பட்டுள்ளன. இம் மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்குடனேயே அரச காரியாலயங்களை செயற்படவைப்பதில் அதிகாரிகள் முயற்சி செய்து வருகின்றனர்.

ஆனால்- தமிழ் மக்கள் குடியமர்ந்து வாழ பின் நிற்கும் பகுதியில் பணிபுரிய தமிழ் ஊழியர்கள் மறுத்துள்ளனர். (தி)

### அமைதி

களை ஈவிரக்கமற்ற முறையில் கொன்று குவித்தனர். ஒருபுறம் இந்தக்கொலைகளைப் புரிந்துகொண்டு, மறுபுறம் தமிழர்மீது காருணியம்காட்ட விரும்புவதாக அரசுகூறுகிறது. சிங்களப் பேரினவாதத்தின் இந்த கபடவேடதாரித்தனத்தை எமது மக்கள் நன்கறிவர்.''

''உண்மையாகவே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் தாங்கொணாத் துன்பங்களை அரசாங்கம்உணர்ந்துகொண்டு அவர்களதுபோக்குவரத்துபிரச்சினையைமனிதாபிமான அடிப்படையில் தீர்த்து வைக்கவிரும்பினால் யாழ்ப்பாண மக்கள் ஏற்கனவே பாவித்துவந்த கேரதீவு - சங்குப்பிட்டிப் பாதையை திறந்துவிட அரசு முன்வரவேண்டும். இதனை நடைமுறைப்படுத்துவதானால் பூநகரிப் பகுதியிலிருந்து தனது படைகளை அரசாங்கம் வாபஸ்பெறவேண்டும்,'' இவ்வாறு அவர்மேலும் தெரிவித்தார்.

ஆனையிறவுப் பாதையை திறந்து விடுவதில் அரசாங்கம் அதீத அக்கறை காட்டுவது பற்றிஅவரிடம்கேட்டபொழுது ''நிச்சயமாக, இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக அரசாங்கம் கருதவில்லை. தமிழர்களின் துன்ப துயரங்களில் அரசாங்கத்திற்கு அக்கறையுமில்லை. இந்த விவகாரம் அடிப்படையில் இராணுவ ரீதியானது வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு, பூநகரி ஆகிய பிரதேசங்களில் இராணுவ வேலிகளை அமைத்து பல ஆயிரக்கணக்கான துருப்புகள் முடங்கிக் கிடக்கின்றன இங்கு நிலைகொண்டுள்ள படைகள் மாரி காலத்தில் ஏகப்பட்ட சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும். ஆனையிறவு பாதையை திறந்து விட்டால் தரைமார்க்கமான விநியோகம்பெற வழிபிறப்பதுடன், இப்பிராந்திய படையணிகள் பலவற்றை இடம்நகர்த்தி



Computer Programming in Basic Language

*4 MONTHS*

செவ்வாய் வியாழன் வகுப்புக்கள்

**ஆரம்பம்: 15-10-1992**

[10.30 மணி]

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
*M. I. D. P. M. (Lond.)*

★ கட்டணம் தவணை முறையில்
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்





## வேலை ஆட்கள் தேவை

கோழிப்பண்ணைக்கு அனுபவம் உள்ள
வேலை ஆட்கள் தேவை

மேற்படி தகைமை உள்ளவர்கள்

ஞாயிறு காலை 8 முதல் மாலை 2 வரை
திங்கள் காலை 8 முதல் மாலை 2 வரை

நேரில் வரவும்

சம்பள விபரம் நேரில் பேசித் தீர்க்கப்படும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

திரு. ந. பத்மசோதி,
(கூட்டுறவுப் பரிசோதகர்)
சீனாப்புலம், வதிரி.

நெல்லியடி திக்கம் பிரதான வீதி ஊடாக ஆலங்கட்டை வீதியில் (கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் வீடு)

(3338)



## 31-ம் நாள் நினைவூட்டல்

எம் பூவாய் முகிழ்ந்தது — 24-03 89



இறை பூவாய் மகிழ்ந்தது — 10-09-92

உயர்திரு அமரர்

**இராசையா நவரெத்தினம்**
(ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

திதி: 10-10-92

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் - தலைவனாக - வழி காட்டியாய் திகழ்ந்து எம்மை வாழவகுத்து வழி நடாத்திய தெய்வப் பெருமகனே! எங்கள் மீது நீங்கள் அள்ளிச் சொரிந்த பாசமிகு தந்தையாய், அறிவுரைகள் வழங்கும் ஆசானாய், நோய் தீர்க்கும் மருத்துவராய் வாழ்ந்து, தாலாட்டி, சீராட்டி, பாராட்டி, எங்களை அரவணைத்து வளர்த்து. 'அமரத்துவம் எய்திய தந்தையே! எங்களின் கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றோம்.

அன்பின் ஆன்மா ஆடவல்லான் திருவடியில் அமைதியுறப் பிரார்த்தித்து நிற்கும்

[மனைவி, பிள்ளைகள்]

சோமசுந்தரப்புலவர் வீதி,
நவாலி வடக்கு,
மானிப்பாய்,

திருமதி என். இந்திராணி,
என். நரேந்திரன்,
என். இந்துஷா.

(சி-5204)

செல்லத்தம்பி பவானந்ததாஸ்
[கொந்தக்காரன் குளம், ஓமந்தை]

அப்பா! என்றழைத்து அழும் குழந்தை - இனி
எப்போ உங்கள் முகம் காணும்?
நீர் மேல் குமிழி போல் ஆனதோ நும் வாழ்வு
பார் மீதில் எம் துயரம் யார் பகிர்வார்?

- குடும்பத்தினர்

(சி/5199)

## 90-ம் நாள் நினைவஞ்சலி



| வீரப்பிறப்பு | வீரச்சாவு |
|---|---|
| 19 - 10 - 1975 | 09 - 07 - 1992 |

## 2-ம் லெப்டினன்ட் கேரனா
[தில்லையம்பலம் வசந்தரூபி]

(09- 07- 1992 அன்று கட்டைக்காட்டில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்தினார்)

முனைந்தாய் மலர்ந்தாய்
சீறும் வேங்கையானாய் எதிரிகளைக் குடைந்தாய்
தமிழீழத்தில் வித்திட்டாய்
மீண்டும் மலர்வாய் இங்கு.

தில்லையம்பலத்தின் மூத்த மகளாய்
நீ பிறந்தாய் வண்ணப் பொலிவுடன்
நீ திரிந்தாய் வசந்தரூபியாய்
மண் மீட்கும் போரிலே நீ மாறினாய் கேரனாவாய்

மலராதோ மலராதோ தமிழீழம் என்றாய்
உன் கனவும் நனவாக
உன் தோழருடன் நாளை நீ
நிச்சயம் காண்பாய் தமிழீழம்

இவருடன் வீரச்சாவெய்திய ஏனைய வேங்கைகளுக்கும் எமது வீரவணக்கத்தை செலுத்துகின்றோம்.

அம்மா, அப்பா, தம்பி, தங்கைமார் அம்மம்மா, அப்பம்மா, பழனிசித்தப்பா, பெரியமாமா, சின்னமாமா (சுவிஸ்), மாணிக்கம்மாமி, தையல்மாமி, தேவிமாமி, பூரணம்மாமி, பெற்றிமாமி, மச்சான்மார், முத்துலிங்கம், இராசலிங்கம், புலேந்திரன், (பிரான்ஸ்) ,சுஜீவன், பழனி, ரவீந்திரன், கஜேந்திரன், சுரேந்திரன், மச்சாள்மார், வவா, கலா, தங்கம், கோணேஸ், வைத்திலிங்கம் குடும்பத்தினர்.

அராலி வீதி,
பொம்மை வெளி, (3315)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 10ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Computer Programming in Basic Language
*4 MONTHS*
செவ்வாய் வியாழன் வகுப்புக்கள்
**ஆரம்பம்: 15-10-1992**
[10.30 மணி]

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM
*M. I. D. P. M. (Lond.)*

★ கட்டணம் தவணை முறையில்
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்
★ கூடிய செய்முறைப் பயிற்சி
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

***ShOrt - Hand & Typing***
வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
*(Pioneers in Computer Education)*
16, 3rd, CROSS STREET JAFFNA
(சி/5195)

## 45வது நாள்நினைவஞ்சலி



## 2வது லெப். இளங்கோ
[பா. பிரபாகரன்]

| வீரஜனனம் | வீரச்சாவு |
|---|---|
| 2-11-1972 | 2708-1992 |

காவினின் கமழ்கின்ற
சுந்தரப்பூக்கள் கூட சுகந்தம்
இழந்து விட்டனவோ
எனும்பிரமை எழுகிறது பிரபா...

வீரச்சாவடைந்த சகபோராளிகளுக்கும் எமது அஞ்சலிகள்

இன்று 10. 10. 1992 நிகழும் வீட்டுக்கிருத்தியங்களிலும் பகல் போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்

கைதடி கிழக்கு
கைதடி. 3337) - குடும்பத்தினர்

அதீத அக்கறை காட்டுவது பற்றிஅவரிடம்கேட்டபொழுது ''நிச்சயமாக, இதனை ஒரு மனிதாபிமானப் பிரச்சினையாக அரசாங்கம் கருதவில்லை. தமிழர்களின் துன்ப துயரங்களில் அரசாங்கத்திற்கு அக்கறையுமில்லை. இந்த விவகாரம் அடிப்படையில் இராணுவ ரீதியானது வெற்றிலைக்கேணி, இயக்கச்சி, ஆனையிறவு, பூநகரி ஆகிய பிரதேசங்களில் இராணுவ வேலிகளை அமைத்து பல ஆயிரக்கணக்கான துருப்புகள் முடங்கிக் கிடக்கின்றன இங்கு நிலைகொண்டுள்ள படைகள் மாரி காலத்தில் ஏகப்பட்ட சிக்கல்களை எதிர்கொள்ளவேண்டி நேரிடும். ஆனையிறவு பாதையை திறந்து விட்டால் தரைமார்க்கமான விநியோகம்பெற வழிபிறப்பதுடன், இப்பிராந்திய படையணிகள் பலவற்றை இடம்நகர்த்தி யாழ்ப்பாண விஸ்தரிப்பு போரில் ஈடுபடுத்தவும் வாய்ப்பு ஏற்படும் இதனால் எமது மண்ணுக்கும் மக்களுக்கும் பெரும் ஆபத்து நேரலாம்'' என அவர் குறிப்பிட்டார்.

### பொருள்

மாவட்டத்திற்குத் தேவையான அத்தியாவசியப்பொருள்களின் தொகுதி ஒன்றையும் எடுத்து வருகிறது. பருத்தித்துறைக்கு வந்து பொருள்களை இறக்கிய பின்னர் மன்னாருக்குச் செல்லும் மேற்படி கப்பல் அங்கு தங்கி நின்று பொருள்களை இறக்கும் அதன் பின்னரே திருமலை சென்று யாழ். மாவட்டத்துக்கான 3000 மெற்றிக் தொன் மாவை ஏற்றிவரும் என்று கூறப்படுகிறது. (க)

(ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை)

திதி: 10-10-92

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய் - தலைவனாக - வழி காட்டியாய் திகழ்ந்து எம்மை வாழவகுத்து வழி நடாத்திய தெய்வப் பெருமகனே! எங்கள் மீது நீங்கள் அள்ளிச் சொரிந்த பாசமிகு தந்தையாய், அறிவுரைகள் வழங்கும் ஆசானாய், நோய் தீர்க்கும் மருத்துவராய் வாழ்ந்து, தாலாட்டி, சீராட்டி, பாராட்டி, எங்களை அரவணைத்து வளர்த்து, 'அமரத்துவம் எய்திய தந்தையே! எங்களின் கண்ணீரால் உங்கள் பாதங்களைக் கழுவுகின்றோம்.

அன்பின் ஆன்மா ஆடவல்லான் திருவடியில்
அமைதியுறப் பிரார்த்தித்து நிற்கும்

[மனைவி, பிள்ளைகள்]

சோமசுந்தரப்புலவர் வீதி, திருமதி என். இந்திராணி,
நவாலி வடக்கு, என். நரேந்திரன்,
மானிப்பாய், (சி-5204) என். இந்துஷா.

## உள் வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**09-10-92**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 6043

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கங்கள்:
26-2941, 28-1085, 24-6663, 28-2385, 24-828, 24-5774, 26-5157, 26-7663, 42-3329, 24-9490, 40-2394, 24-4390, 28-1730, 36-924, 25-6365, 71-4984.

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கங்கள்
24-2548, 41-8467, 27-1141, 27-7043, 26-3962, 26-6062, 43-1019, 24-5137, 28-3735, 42-6119, 42-1320.

தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

தகைமைகள்:

**8 ஆம் வகுப்புத் தொடக்கம்**
**க. பொ. த. (உயர்தரம்) வரை**

உயரம்: 5' 6"
வயது : 18 - 30

மேற்கூறிய தகைமையுடையவர்கள் சான்றிதழ்களுடன் நாவலர் வீதியிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் சமுகந்தரவும். தபால் மூல விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

பா. நடேசன்
பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி/5197)